இந்தியப் பொருட்களின் மீதான இறக்குமதி வரியினை அமெரிக்கா கடுமையாக உயர்த்தியுள்ள நிலையில் – தமிழ்நாட்டில் பின்னலாடை உள்ளிட்ட துறைகளின் பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு

# வர்த்தகத்தை மீட்டெடுக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வீர்!

## பிரதமருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஆக. 29 -**

**இந்தியப் பொருட்களின் மீதான இறக்குமதி வரியினை அமெரிக்கா உயர்த்தியுள்ள நிலையில், தமிழ்நாட்டில் பின்னலாடை உள்ளிட்ட பல்வேறு தொழில் துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, வர்த்தகத்தை மீட்டெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளப் பதிவிட்டுள்ளார்.**

**அதில் முதல்வர் அவர்கள், “உடனடி நிவாரணம் மற்றும் அமைப்பு ரீதியாக சீர்திருத்தங்கள் மூலம் நமது தொழிற்சாலைகள் மற்றும் பணியாளர்களைக் காக்க வேண்டுகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.**

அதன் விவரம் வருமாறு:-

இந்தியப் பொருட்களின் மீதான இறக்குமதி வரியினை அமெரிக்கா உயர்த்தியுள்ள நிலையில், தமிழ்நாட்டில் பல்வேறுதுறைகளில்இலட்சக்கணக்கான மக்களின்வாழ்வாதாரம்பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வர்த்தகத்தை மீட்டெடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களுக்கு 16.8.2025 அன்று கடிதம் எழுதினார்.

அக்கடிதத்தில், இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில், இரு நாடுகளுக்கும் பயனளிக்கக் கூடிய வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதற்கு ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டுவதாகவும், தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கான ஒன்றிய அரசின் நிலைப்பாட்டை முழுமையாக ஆதரிப்பதாகவும் குறிப்பிட்ட முதலமைச்சர் அவர்கள்,

தற்போதைய 25% வரி மற்றும் அதன் தொடர்ச்சியாக 50% வரி அதிகரிப்பு காரணமாக கடுமையான தாக்கங்களை எதிர்கொள்வதால், தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் கவலை அளிக்கும் ஒரு பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதாகத் தெரிவித்தார். கடந்த நிதியாண்டில், இந்தியாவின் மொத்த பொருட்கள் ஏற்றுமதியான $433.6 பில்லியன் மதிப்பிலான பொருட்களில் 20 விழுக்காடு அமெரிக்கா விற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் நிலையில், தமிழ்நாட்டின் $ 52.1 பில்லியன் பொருட்களில் 31 விழுக்காடு அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகக் கோடிட்டுக் காட்டினார்.

இவ்வாறு அமெரிக்கச் சந்தையை தமிழ்நாடு அதிகமாகச் சார்ந்திருப்பதால், இறக்குமதி வரியின் தாக்கம், இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கும் என்றும், இந்த வரிவிதிப்பு தமிழ்நாட்டின் உற்பத்தித் துறை மற்றும் வேலைவாய்ப்பில் குறிப்பிடத்தக்க பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டார்.



**பெருமளவிலான பணி இழப்புகளுக்கு வழிவகுக்கும்!**

இந்த வரிவிதிப்பினால் ஜவுளி, ஆடைகள், இயந்திரங்கள், ஆட்டோமொபைல்ஸ், ரத்தினக் கற்கள் மற்றும் நகைகள், தோல், காலணிகள், கடல் பொருட்கள் மற்றும் இரசாயனங்கள் துறைகளில் மிகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இந்தத் துறைகள் அனைத்தும் அதிகத் தொழிலாளர்களை சார்ந்தவை என்பது இன்னும் கவலைக்குரியது என்றும், இதில் எந்தவொரு ஏற்றுமதி மந்தநிலையும் விரைவாக பெருமளவிலான பணி இழப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் தனது கடிதத்தில் கவலைபடத் தெரிவித்தார்.

**ஒன்றிய அரசின் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு முழு ஒத்துழைப்பளிக்கும்!**

தமிழ்நாட்டின் வலுவான உற்பத்தித் துறை, இதுவரை கண்டிராத ஒரு நெருக்கடியை தற்போது எதிர்கொள்வதாகவும், பல்வேறு துறைகளில் இலட்சக் கணக்கான மக்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகவும் குறிப்பிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்கள் இந்த விஷயத்தில் அவசரமாகத் தலையிட்டு, சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் தொழில்துறையைச் சார்ந்தவர்களுடன் கலந்தாலோசித்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அதோடு, இந்த இக்கட்டான சூழ்நிலையைச் சமாளிக்கவும், வர்த்தகத்தை மீட்டெடுக்கவும் ஒன்றிய அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழ்நாடு முழு ஒத்துழைப்பினை வழங்கும் எனவும் தனது கடிதத்தில் முதல்வர் அவர்கள் உறுதிபடத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியப் பிரதமர் அவர்களுக்கு தாம் 16.8.2025 அன்று எழுதிய மேற்காணும் கடிதத்தைச் சுட்டிக்காட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

அமெரிக்காவின் 50% வரிவிதிப்பு தமிழ்நாட்டின், குறிப்பாகப் பின்னலாடை மையமான திருப்பூரின், ஏற்றுமதி வர்த்தகத்தினைப் பெரிதும் பாதித்துள்ளது. ஆண்டுக்கு 3000 கோடி ரூபாய் வர்த்தகம் பாதிப்பதோடு, பல்லாயிரக் கணக்கானோரின் வேலைவாய்ப்பும் இதனால் பாதிப்படைந்துள்ளது.



அமெரிக்காவில் 50 சதவீத வரி விதிப்பு அமல்:

ரூ.3 ஆயிரம் கோடிக்கு ஆயத்த ஆடை வர்த்தகம் பாதிக்கும்

திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் தகவல்

இந்நிலையில், ஒன்றிய அரசிடம் முன்வைத்த கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்துகிறேன். உடனடி நிவாரணம் மற்றும் அமைப்புரீதியான சீர்திருத்தங்கள் மூலம் நமது தொழிற்சாலைகள் மற்றும் பணியாளர்களைக்காக்கவேண்டுகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# கழகத் தலைவராக 8ஆம் ஆண்டுத் தொடக்கம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

வெற்றி பெற முடியவில்லை. அத்துடன் 5 முறை தமிழ்நாட்டில் ஆட்சிபுரிந்த அ.தி.மு.க. கட்சி இந்த நாடாளுமன்றத் தேர்தலில் 7 தொகுதிகளில் டெபாசிட்களை இழந்து படுதோல்வியைச் சந்தித்தது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கழகத் தலைவராகப் பொறுப்பேற்ற பின் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றிபெற்ற மாவீரர்! எதிரிகளுக்கு தோல்விகளை மட்டுமே பரிசாகத் தந்து அதிரவைத்தவர்.

2018 ஆம் ஆண்டு கழகத் தலைவராகப் பொறுப்பேற்ற நாள் முதல் தி.மு.க. தொண்டர்களின் ஒற்றுமையை வலுப்படுத்தி, கழக வளர்ச்சியை உறுதி செய்துள்ளார். தமிழக மக்களின் நலனை முன்னிறுத்தி, பல்வேறு நவீன திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளார். சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை என்ற தத்துவங்களை உறுதியாக நிலைநிறுத்தியுள்ளார்.

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான்காண்டுகளில் மக்களின் நலனுக்காக பல்வேறு முத்திரைத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, தமிழ்நாட்டை சமூகநீதியும் வளர்ச்சியும் இணைந்து விளங்கும் மாநிலமாக மாற்றி வருகிறார்.

மகளிர்க்கான விடியல் பேருந்து பயணத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், நான் முதல்வன் திட்டம், “முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு” பணிபுரியும் மகளிருக்கு “தோழி விடுதிகள்” மாணவர்கள் நலனுக்காக தமிழ்ப் புதல்வன், உங்களுடன் ஸ்டாலின், நலன் காக்கும் ஸ்டாலின், தாயுமானவர் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

ஐ.நா. அவையும், இந்திய ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்புகளும், சான்றோர்களும் மிகச்சிறந்த முதலமைச்சர், மிகச்சிறந்த நிர்வாகத் திறன் படைத்தவர். ஏழை எளியோரால் எங்கள் நலன் காக்கும் திராவிட நாயகர் ! என போற்றப்படுகிறார் !

மகளிர் உரிமைத் தொகை, காலை உணவுத் திட்டம், மகளிர்க்கான விடியல் பயணத் திட்டம் போன்ற மக்கள் நலத்திட்டங்களை, இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களும், வெளிநாடுகளும் பின்பற்றும் வகையில் நடைமுறைப்படுத்தியுள்ளார் நமது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.

பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் காலை உணவு விரிவாக்கத் திட்டத்தினை தொடங்கிவைத்து மக்கள் போற்றும் உன்னதத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அவருடைய திட்டங்கள் அனைத்து மாநிலங்களும் பின்பற்றக்கூடிய வகையாக உள்ளன என மனதாரப் பாராட்டினார். அதே போன்று, 27.8.2025 அன்று பீகாரில் மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர திட்டத்தை கண்டிக்கும் வகையில் நடைபெற்ற பேரணியில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவரான ராகுல் காந்தி, பீகார் ராஷ்ட்ரியா ஜனதா கட்சியின் தலைவருமான தேஜஸ்வி யாதவ், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. பிரியங்கா காந்தி மற்றும் இந்தியா கூட்டணி தலைவர் ஆகியோருடன் பங்கேற்று இந்தியாவின் உள்ள அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் தன்னுடைய ஆழமான கருத்தினை பதிவு செய்து மாபெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

தமிழக அரசின் நவீன வளர்ச்சிக்கும், திராவிட இயக்கத்தின் தொடர்ச்சிக்கும், மு.க.ஸ்டாலின் அவர்களின் 8 ஆண்டுகால தலைமை சிறப்பாக விளங்குகிறது. மக்கள் நம்பிக்கையோடும், தொண்டர்கள் உறுதியோடும், தமிழ்நாட்டின் வளமான எதிர்காலத்தை உருவாக்கும் பணியில் தொடர்ந்து வழிநடத்தி வருகிறார்.



சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் தென்னங்குடிபாளையம் ஊராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.ஆர்.சிவலிங்கம் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஆணையத்தை வழங்கினார். அப்போது ஒன்றிய செயலாளர்கள் டாக்டர் வே.செழியன், ரா.வரதராஜன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், நல்லம்மாள், சந்திரமோகன், சிவராமன், கருணாநிதி, நடராஜ், சிவாஜி, ராஜேந்திரன், குணசேகரன், வீராசாமி, சேட்டு, சசிகுமார், அன்பழகன், ரஜினி, மற்றும் 13 துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும்

# மசோதாக்களுக்கு நீண்ட நாட்கள் ஒப்புதல் அளிக்காமல் இருப்பதை ஏற்க முடியாது!

## உச்சநீதிமன்றம் திட்டவட்டம்!

புதுடெல்லி, ஆக. 29 -

சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்கள் மீது நீண்ட நாட்கள் ஒப்புதல் அளிக்காமல் இருப்பதை ஏற்க முடியாது என்று, உச்சநீதிமன்றம் குடியரசுத்தலைவர் கேள்வி எழுப்பிய வழக்கில் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க கால நிர்ணயம் செய்ததற்கு எதிராக குடியரசு தலைவர் மூலம் கேள்வி எழுப்பிய வழக்கு, உச்சநீதிமன்றத்தில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. ஒன்றிய அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கும் விவகாரங்களில் நீதிமன்றம் எந்த அளவுக்கு உத்தரவிட்டாலும், அது சட்டப்படியானதா என்பது குறித்து ஆய்வுசெய்ய வேண்டும் என்றும், இதற்கு குடியரசு தலைவர் விளக்கம் கேட்பதாகவும் தெரிவித்தார்.

ஒன்றிய அரசின் வாதத்தின்போது குறுக்கிட்ட நீதிபதிகள், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் மீது எவ்வளவு நாட்கள் ஒப்புதல் வழங்காமல் இருக்க முடியும், அதற்கான பதில் என்ன? இதில் ஒன்றிய அரசின் பதில் என்ன? அரசியல்சாசன சபை விவாதத்தில் 6 வாரங்களில் ஆளுநர் முடிவு எடுக்க வேண்டும் என்றே விவாதிக்கப்பட்டது. பின்னர் as soon as என்று மாற்றப்பட்டது. உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பதே அதன் நோக்கம் என்று உறுப்பினர் தெரிவித்தார்.

அப்படியானால் As Soon as என்பதற்கு 6 வாரங்களுக்கு மேல் நீடிக்க கூடாது என்பதுதான் அர்த்தம் என்றும், அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களின் முடிவை எதிர்பார்ப்பை நாம் புறக்கணிக்க முடியுமா? என்றும் உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது. ஆளுநர்கள் ஆறு மாதம், ஒரு வருடம் என்று மசோதாக்கள் மீது முடிவெடுக்காமல் இருப்பதை நியாயப்படுத்த முடியாது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். நீதிமன்றம் ஆளுநரிடம் பதில் கேட்பதில் தவறில்லை. ஆளுநர் ஒன்றிய அரசை பிரதிநிதித்துவ படுத்துபவர் இல்லை என்ற ஒன்றிய அரசின் வாதத்தை ஏற்க முடியாது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். ஆளுநர் ஒன்றிய அரசின் பிரதிநிதி தான் அவரிடம் அதிகாரத்தை ஒன்றிய அரசுதான் ஒப்படைத்துள்ளது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் வாதத்தை மூத்த வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி தொடங்கினார். ஆளுநருக்கு தனி விருப்ப உரிமை இல்லை என்று தெரிவித்த அபிஷேக் சிங்வி, எந்த மசோதா மீதும் முடிவெடுக்க ஆளுநருக்கு மூன்று வழிகள் மட்டுமே உள்ளன என்று கூறினார். மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க விரும்பவில்லை என்றால் அதனை திருப்பி அனுப்பலாம், அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம், அதனை தாண்டி எந்த முடிவும் எடுக்க முடியாது என்று தமிழ்நாடு அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆளுநருக்கு எந்த சுதந்திரமான விருப்ப உரிமையும் இல்லை என்றும், குடியரசுத் தலைவரும் ஆளுநரும் பெயரளவிலான தலைவர்கள், ஒரு சில விவகாரங்களை தவிர நிர்வாக ரீதியாக முடிவெடுப்பதில் எந்த விருப்ப உரிமையும் இல்லை என்றும் அமைச்சரவை முடிவுக்கு அவர்கள் கட்டுப்பட்டவர்கள் என்றும் அபிஷேக் சிங்வி வாதிட்டார்.

மூத்த முன்னோடியாக, கழகத்தின் முதுபெரும் உறுப்பினராக இருந்து

# நமக்கு வழிகாட்டியவர், தருமபுரி ஆர்.சின்னசாமி!

## மறைவுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, ஆக. 29 -**

**சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஆர்.சின்னசாமி அவர்களின் மறைவையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், “மூத்த முன்னோடியாக, கழகத்தின் முதுபெரும் உறுப்பினராக இருந்து நமக்கு வழிகாட்டியவர், முன்னாள் எம்.எல்.ஏ. தருமபுரி ஆர். சின்னசாமி!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த இரங்கல் செய்தி வருமாறு: -

1971, 1984 மற்றும் 1989ஆம் ஆண்டு தேர்தல்களில், தி.மு.கழக உறுப்பினராகத் தருமபுரி சட்டமன்றத் தொகுதியில் வென்ற வரும், ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டக் கழகத்தின் முன்னாள் செயலாளருமான ஆர்.சின்னசாமி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன்.

சின்னசாமி அவர்கள் மூன்று முறை தருமபுரி சட்டமன்ற உறுப்பினராக இருந்து அம்மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பெரும் பணிகளை ஆற்றியவர்.

எம்.ஜி.ஆரின் அ.தி.மு.க. ஆட்சியின்போது சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக, சட்டமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்ட இனமானப் பேராசிரியர் உள்ளிட்ட பத்து கழக சட்டமன்ற உறுப்பினர்களில் தருமபுரி ஆர்.சின்னசாமியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மூத்த முன்னோடியாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதுபெரும் உறுப்பினராக இருந்து, நமக்கு வழிகாட்டிய ஆர்.சின்னசாமி அவர்களின் மறைவு தருமபுரி மக்களுக்கும் கழகத்துக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், கழகத்தினருக்கும், பொது மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.